# வலம்புரி

VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 05 செவ்வாய்க்கிழமை (19.03.2002) தொலைபேசி 3378 ஒலி 90







### அரச தரப்பில் பெரும் பரபரப்பு

# அமெரிக்காவிடம் ஆயுத உதவியை இலங்கை அரசு கோரியது !

(கொழும்பு)

பாதுகாப்பு படையினரின் கட்டமைப்பைப் பலப்படுத்தவும் நவீன மயப்படுத்தவும் அமெரிக்காவின் உதவியை இலங்கை அரசு கோரியுள்ளது. இவ்விடயம் குறித்து பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மெலிந்த மொறகொட ஆகியோர் கொழும்பு வந்திருந்த அமெரிக்காவின் தென்னாசியா விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதியமைச்சர் கிறிஸ்ரினா றொக்காவுடன் இரகசிய பேச்சு நடத்திய தாக அரச வட்டாரங்களை ஆதாரங்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவத்தினருக்கு பயிற்சி, புலனாய்வு பிரிவினருக்கு பயிற்சி, மற்றும் வேவுபார்க்கும் திறனை அதிகரித்தல் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக தெரிவிக்ககப்படுகின்றது.

இதேவேளை அரசாங்கம் புலனாய்வு பிரிவை வலுப்படுத்தும் வகையில் ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் மெரில் குணரத்தினாவை ஏற்கனவே பணியில் அமர்த்தியுள்ளது. அத்துடன் பாடசாலையை விட்டு வெளியேறுபவர்கள் மற்றும் பட்டதாரிகளை புலனாய்வு பிரிவில் சேர்த்து அவர்களை பலப்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இது இவ்வாறிருக்க அண்மையில் மெலிந்த மொறகொட ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றமை இராணுவ ரீதியான உதவியையும் ஒத்துழைப்பையும் பெறுவதற்கே என்றும் அரச வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இதேவேளை சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இவ் வேளையில் பாதுகாப்பு படையினரை அரசு மறைமுகமாக பலப்படுத்துவது சமாதான ஆர்வலர்களை விசனத்துக்குள்ளாக்கியுள்ளது. (இ)

## படையினர் மீது கடும் சோதனை

(வவுனியா)

வவுனியாவில் இருந்து தென் பகுதிக்கு லீவில் செல்லும் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஈரற்பெரியகுளத்திலும், மதவாச்சியிலும் பஸ்களில் இருந்து இறக்கப்பட்டு கடும் சோதனைக்குள்ளாக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

லீவில் செல்லும் படையினர் ஏதாவது ஆயுதங்களை கடத்தி செல்கிறார்களா என்பதை கண்டு பிடிப்பதற்காகவே இவ்வாறு கடுமையாக சோதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அந்த பஸ்களில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் எதுவித சோதனைக்கும் உள்ளாக்கப்படுவதில்லை. (வ)

# ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஏப்ரல் மாதமே நாடு திரும்புவார்

## வன்னி செல்ல அரசின் அனுமதி வேண்டுமாம்

(நமது நிருபர்)

**இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிர பாகரனுடன் நேரடியாக கருத்து பரிமாறுவதற்கு இலண்டனிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அடுத்தமாதம் கொழும்பு வந்து அங்கிருந்து நோர்வேயின் அனுசரணையுடன் தொடர்வாகன அணியுடன் வன்னிக்கு செல்லவுள்ளார் என அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் நோர்வே தூதுவர்கள், சர்வதேசகண்காணிப்புக்குழுத்தலைவர், ஆகியோருடன் இடம்பெற்ற பல சுற்றுப்பேச்சுக்கள் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் நேரடியாகச்சம்பாசிப்பதற்கு அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அடுத்தமாதம் வன்னிக்கு வரவுள்ளார்.

பாலசிங்கத்தின் வருகைத் திகதி பாதுகாப்பு கருதி இன்னமும் வெளியிடப்படவில்லை ஆயினும் அவர் வருகைக்கான திகதி அடுத்தமாதத்தில் திடீரென குறிப்பிடப்பட்டு வன்னிக்கு செல்வார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் நவீன தொலைத் தொடர்பு கருவிகள் மூலம் தொடர்பு கொள்ளப்பட்டாலும் அதில் பேச்சு வார்த்தைக்கான முக்கிய விடயங்களில் உள்ள இரகசிய தன்மையை பாதுகாக்க முடியாது போய்விடும் என்பதால் தான் நேரடியாக வரவிருப்பதாக அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளதாக மேலும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்திலும் பொங்கு தமிழ்

### யாழ் பல்கலை சமூகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் பொங்கு தமிழ் நிகழ்வொன்றை நடாத்த யாழ் பல்பலைக் கழகச் சமூகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளை வரவேற்றும், விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம், தமிழ்த் தேசியம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை வலியுறுத்தியுமே இவ் எழுச்சி நிகழ்வை அடுத்த மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்த பல்கலைக் கழக சமூகம்

(8ம் பக்கம் பார்க்க)

# அரசியல் யாப்பு பேரவை பொறுப்பு சபாநாயகரிடம் விடப்படும் !

### அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் யாப்பின் 17வது சட்டத் திருத்தத் திற்கமைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நடவடிக்கை எடுக்காது விட்டால் அரசாங்கம் மாற்று வழிகளை மேற் கொள்ளும் என்றும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வலியுறுத்திக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலுந்தெரிவித்திருப்பதாவது:-

அரசியல் யாப்புப் பேரவையை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதியின் பொறுப்புக்கள் பாராளுமன்ற சபா நாயகரிடம் சட்ட ரீதியாக ஒப்படைக்கப்படும். இதற்கு

(8ம் பக்கம் பார்க்க)

## மாணவியின் சடலம் வன்னிக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுகயீனம் காரணமாக உயிரிழந்த யாழ் பல்கலைக்கழக நடனத் துறை இரண்டாம் வருட மாணவி சுப்பிரமணியம் செல்வநிலா என்பரின் சடலம் அவரது சொந்த இடமான முல்லைத்தீவு புதுக்குடியிருப்புக்கு குடாக்கடல் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது.

யாழ்பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பலாலி படைத் தள உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சடலத்தை வன்னிக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்திருந்தார்.

பாசையூரில் இருந்து தனியார் மீன்பிடிப்படகொன்றில் இரு பல்கலைக்கழக மாணவர்கள், பிரஸ்தாப மாணவியின் உறவினர்கள் இருவர், மற்றும் படகோட்டிகள் நால்வருடன் சடலம் நேற்று மாலை 5மணிக்கு வன்னிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.(இ)

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

புரிந்துணர்வு உடன்படிக்கையை எதிர்த்தும், சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் கொழும்பு கோட்டையில் ஜே.வி.பியினர் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பல நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சமாதான முயற்சிகளுக் எதிரான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிரான துண்டுப்பிரசுரங்களும் அங்கு விநியோகிக்கப்பட்டன. (வ)

## மட்டக்களப்பில் நேற்று புகையிரதசேவை ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக்கும் கொழும்புக்கும் இடையிலான புகையிரத சேவை ஐந்து வருடங்களுக்கு பின்னர் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு யுத்தம் காரணமாக 1996ம் ஆண்டு தடைப்பட்டிருந்த இப் புகையிரதசேவை நேற்று முதல் மட்டக்களப்பு வாழைச்சேனைவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் அரசும் விடுதலைப்புலிகளும் மோதல் தவிர்ப்பு மற்றும் யுத்தநிறுத்த

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சரின் யாழ். விஜயம்

# இரத்தம் சிந்திப் போராடி வரும் தமிழரின் சுயாதிபத்தியத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் ஆபத்து

### எச்சரிக்கிறது புதிய ஜனநாயகக் கட்சி

(கொழும்பு)

அமெரிக்கஉதவிஇராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா ரொக்காவின் இலங்கைக்கான வருகையும்அமெரிக்ககடற்படைக் கட்டளைத் தளபதியுடன் இணைந்து யாழ்ப்பாணத்திற்கான அவரது பயணமும் தற்செயலான நிகழ்வுகள்அல்ல. இது பல்லாயிரக்கணக்கான உயிர்களைத் தியாகம் செய்தும் இரத்தத்தைச்சொரிந்தும் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வந்த தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி முழுநாட்டினது இறைமைக்கும்,சுதந்திரம், சுயாதிபத்தியத்திற்கும் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய ஆபத்தாகும்.

அமெரிக்காவின் இத்தகைய ஆதிக்க ஊடுருவல் நோக்கத்தையும் நாட்டாண்மைக்கார நடவடிக்கைகளையும் அடையாளம் கண்டு எதிர்த்து நிற்க வேண்டியது அனைத்து தூர நோக்குடைய நேர்மையான அரசியல் சக்திகளது கடமையாகும்.

இவ்வாறு புதியஜனநாயகக் கட்சியின் அரசியல் குழுசார்பாக பொதுச் செயலாளர் சி.கா. செந்தில்வேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும்;

தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சிக்கோரிக்கையையும் அதற்கான போராட்டத்தையும் நசுக்கி இல்லாதொழிக்கும் முடிவிற்கு அமெரிக்கா வந்து விட்டதையே உணர முடிகின்றது.

அதேபோன்று தென்னாசியப் பிராந்தியத்தில் தனது நிலை கொள்ளலுக்குத் தளமாக இலங்கையை மாற்றுவதற்கு அமெரிக்கா முயன்று வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

இதனை அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸின் அண்மைக்கால அறிக்கைகளாலும் அவரது நடவடிக்கைகளிலும் காணக்கூடியதாக உள்ளது.

இன்று நோர்வேயின் மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதனால் யுத்தம் ஓய்ந்து பல ஆக்கபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புலிகள் இயக்கமும் அரசாங்கமும் பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கான சூழலும் தோன்றியுள்ளது.

ஆனால் இவற்றுச்கிடையே அமெரிக்கா புகுந்து நின்று அநாவசியமான அறிக்கைகளையும் கருத்துக்களையும் வெளியிட்டு வருவதுடன் தானே சமாதானத்தின் தூதுவன்போன்றுநடந்துகொள்ள முற்பட்டுள்ளது.

இதே அமெரிக்கா கடந்த இருபது ஆண்டுகளில் யுத்தத்தைக் கொழுந்து விட்டு எரிவதற்கு முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் பின்பு பொது ஜன முன்னணி ஆட்சிக்கும் சகல வகையான உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கி வந்தது என்பது பகிரங்கமான தாகும்.

அதுமட்டுமன்றி கடந்த ஆட்சிக் காலத்தில் நோர்வேயின் அனுசரணையை இரு தரப்பும் ஏற்றுக் கொண்ட வேளை அமெரிக்கா மிக அலட்சியத்துடனேயே நடந்து கொண்டது. ஆனால் இன்று நோர்வேக்கும் மேலாகத் தனது ஆணைக்கோலைக் காட்டி தமிழ் மக்களையும் அவர்களது போராட்டத்தையும் புலிகள் இயக்கத்தையும் மிரட்டி அடிபணியச் செய்யும் வகையில் நடந்து கொள்கிறது.

அமெரிக்கா எமது இனப் பிரச்சினை விடயத்தில் எடுத்துள்ள இப்புதிய நிலைப்பாடு தமிழ் மக்களுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இலங்கை நாட்டிற்கும் மட்டுமன்றி இந்தியாவிற்கும் பாரிய அச்சுறுத்தலையே ஏற்படுத்தி நிற்கிறது. முன்பு யுத்தத்தின் மூலம் சாதிக்க முடியாத தனது ஆதிக்க நோக்கங்களை இப்போது சமாதானததுக்கான கண்ணியவான்போன்று நாடகமாடி நிறைவேற்ற முற்பட்டுள்ளது.

எனவே புலிகள் இயக்கமும் அரசாங்கமும் சகல இன மக்களும் மிக நிதானத்துடனும் தூர நோக்குடனும் செயல்

(7ஆம் பக்கம் பார்க்க)

---

கட்டைவேலி-நெல்லியடி ப நோ. கூ சங்கம், கரவெட்டி

## பதவிகள் வெற்றிடம்

எமது சங்கத்தின்பின்வரும்பதவிகளுக்கு விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கவிரும்புவோர் எமது சங்கத் தலைமைப் பணிமனையில் வேலை நாட்களில் விண்ணப்பப் படிவத்தை ரூபா 20/- செலுத்திப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து 30. 03. 2002ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் 'பொதுமுகாமையாளர், கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் கரவெட்டி' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கல்வித் தகைமைகள், அனுபவச் சான்றிதழ்களின் போட்டோப் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சங்க எல்லைப் பரப்புக்குள் வசிப்பவர்களுக்கும் சங்க சேவையில் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

### சுற்று நிருபம் 31 97க்கு- அமைய

1) இலிகிதர் 302.13
சம்பள அளவுத் திட்டம்; 2800-4250 / 65x10-80x10

2) இலிகிதர் 302.14
சம்பள அளவுத் திட்டம்; 2750-4100 / 60x10-75x10

3) இலிகிதர் 302.15
சம்பள அளவுத் திட்டம்: 2700-4000 / 60x10-70x10

4) தட்டெழுத்தாளர் 305.15 (பெண்)
சம்பள அளவுத் திட்டம்: 2700-4000 / 60x10-70x10

5) காசாளர் 306.15
சம்பள அளவுத் திட்டம்: 2700-4000 / 60x10-70x10

6) தொலைபேசி இயக்குனர் 311.16
சம்பள அளவுத் திட்டம்: 2650-3750 / 50x10-60x10

7) விற்பனை உதவியாளர் 308.17
சம்பள அளவுத் திட்டம் 2600-3500 / 40x10-50x10

8) சாரதி 312.13
சம்பள அளவுத் திட்டம்: 2800-4250 / 65x10-80x10

9) சாரதி 312.15
சம்பள அளவுத் திட்டம் 2700-4000 / 60x10-70x10

10) அலுவலக உதவியாளர் 317.17
சம்பள அளவுத் திட்டம் 2600-3500 / 40x10-50x10

11) களஞ்சிய தொழிலாளி 316.15
சம்பள அளவுத் திட்டம் 2700-4000 / 60x10-70x10

குறிப்பு: மேற் கூறப்பட்ட பதவிகளுக்கான தகமைகளையும், மேலதிக விபரங்களையும், சங்கத்தில் காரியாலய நேரத்தில் பார்வையிட ஒழுங்கு செய்யப்பட்டுளளது.

செ. கெங்காதரன்
பொது முகாமையாளர்

(கி-3726)

---

## இராசி பலன்

19.03.2002
(பங்குனி 05 செவ்வாய்)
பஞ்சமி பி.ப 3.34
கார்த்திகை பி.இ 4.49
சுப 10.49-12-19
கார்த்திகை விரதம்

**மேடம்**
வாக்கு கலகம்,மாதர்நட்பு, சயன சுகக்குறைவு, தொழில் கஷ்டம்.

**இடபம்**
மனக்குழப்பம், வாக்குப் பலிதம், காரியம் கைகூடும், தொழில் நன்மை.

**மிதுனம்**
காரிய அலைச்சல், சுப செலவு, சயனசுகக் குறைவு, எதிர்பாராத நன்மை.

**கடகம்**
நிலைமாற்றம், கீர்த்தி, முயற்சி நிறைவேறும், தொழில் நன்மை.

**சிங்கம்**
தர்மம், பெரியோர் மனஸ்தாபம், காரியம் கைகூடும், நல்லசம்பவம்.

**கன்னி**
பிரயாணம், முயற்சி தாமதம், புதிய திட்டம், வயிற்றுக்கோளாறு.

**துலாம்**
எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தாமதம், வேலைப் பளு, போசன சுகம்.

**விருச்சிகம்**
திடீர்பயணம், தனவரவு, காரிய நன்மை, சொத்துக்களால் நன்மை.

**தனுசு**
காரிய அனுகூலம், சத்துரு ஜெயம், தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி.

**மகரம்**
குடும்பக்கவலை, காரிய தாமதம், சகோதரர் உதவி, வியாபார நன்மை.

**கும்பம்**
உடல் சோர்வு, கல்வி மேன்மை, காரியதாமதம், தாய்வழி உறவு.

**மீனம்**
வாக்கு மேன்மை, கூட்டு முயற்சி, தனவரவு, காரிய நன்மை.

(பழையநேரப்படிகணிப் படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

---

## 12ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் மறைவு

10 - 10 - 1961 19 - 03 - 1990



அமரர்
**பஞ்சலிங்கம் பத்மநாதன்**
(B. B. A. Cey)
(பழைய மாணவன், யூனியன்கல்லூரி, சமூகசேவை உத்தியோகத்தர் துணுக்காய்)

பன்னிரண்டு ஆண்டுகள் பறந்தும்
உன் பெயர் உச்சரிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
நெசவுசாலை வீதி, தாய், சகோதரர்
வீமன்காமம், மைத்துனிமார் பெறாமக்கள்
தெல்லிப்பழை.

(4849)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்
இலங்கை

## கேள்விப்பத்திர அறிவித்தல்

பின்வரும் பொருட்களைவழங்குவதற்கு தகுதியுடைய வர்த்தகர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

01. பிணைச்சல்,பூட்டு,திறாங்கு,யன்னல்கொழுக்கி போன்றவை
02. நீர்குழாய்கள், நீர்க்குழாய் இணைப்புக்கள், வால்வுகள் மற்றும்ஏனையநீர்க்குழாய்ப்பொருட்கள்.
03. ஓட்டுப்பலகைகள்
04. செரமிக் உபகரணங்கள்
05. தீந்தைகள், வாணிஸ் பிறஸ்கள்
06. மின்சாரப் பொருட்கள்

கேள்விப்பத்திரப்படிவங்களைமீளளிக்கத்தகாதவைப்புப்பணமாக ரூபா.500.00 ஐக் காசாகயாழ்.பல்கலைக்கழக நிதிக்கிளையில் (அல்லது யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளை கணக்கு இல.90501) செலுத்தி அதற்கான பற்றுசீட்டை சமர்ப்பித்து 20.03.2002 தொடக்கம் 22.03.2002 வரை பல்கலைக்கழக நிதிப் பிரிவில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 26.3.2002 ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னதாக நிதியாளர்,யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திர கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் 'கட்டடப் பொருட்கள்வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்' என்று குறிப்பிடல்வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 26.3.2002 அன்று பி.ப2.30 மணிக்குத்திறக்கப்படும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

(சி-3725)

## பூசகர் விபரம் சேகரிப்பு

(மந்திகை)

வடமராட்சிதெற்கு-மேற்கு பிரதேச செயலர்பிரிவிலுள்ள சைவ ஆலயங்களின் பூசகர் களது விபரங்கள் சேகரிக்கப் படுகின்றன.

இதன் அடிப்படையில் கிராம அலுவலர் வழங்கி வரும் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகங்களில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (உ-23)

## ஆசிரியர் பற்றாக் குறை

(தென்மராட்சி)

நயினாதீவு மகாவித்தியாலயம்,நாகபூஷணி வித்தியாலயம், கணேசா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் மற்றும் தளபாடங்களுக்கானதட்டுப்பாடு தொடர்ந்தும் நீடித்து வருவதாகத் தெரியவருகிறது.

இம் மூன்று பாடசாலைகளிலும் மொத்தமாக ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். (செ-77)

## எழுதுமட்டுவாளில் தென்னைகள் பெரும் அழிவு

பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற எழுதுமட்டுவாள் பிரதேசத்தில இருக்கும்தென்னந் தோட்டங்களில் நின்ற ஆயிரக்கணக்கான தென்னைமரங்கள் பட்டுப்போய்விட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

இதேவேளை, இப்பகுதியிலுள்ள வீதியோரங்களில் புல் பூண்டுகள் பெரிய அளவில் முளைத்திருப்பதையும், பற்றைச்செடிகள் யாவும் பாதுகாப்புப் படையினரால் புல்டோசர் மூலம் அழிக்கப்பட்டு நிலம் சீராக்கபப்பட்டு வருவதையும் காணமுடிகிறது. (செ-77)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியகலாசாலையில்'மருந்துகளின் தவறான பாவனை'என்ற தலைப்பின் கீழ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளைகாலை நடைபெறவிருக்கின்றது.

இக் கருத்தரங்கு யாழ் மருத்துவபீடத்தைச் சேர்ந்த சமுதாய மருத்துவத்துறை மாணவர்களால் நடத்தப்படவிருக்கின்றது. இதில் ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்தவர்கள் மட்டும் கலந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-19)

## ஆலயங்களில் இடம் பெறும் சடங்குகள், கிரியைகள் மட்டும் மனிதனுக்கு நிம்மதியைத் தருமா?

### யாழ். மாவட்ட நீதிபதி வினா எழுப்புகிறார்

(காரைநகர்)

ஆலயங்களில் நடைபெறும் விழாக்கள், சடங்குகள், மட்டும் மனிதனுக்குநிம்மதியைத் தருமா?

இவ்வாறு வினா எழுப்பியுள்ளார், யாழ். மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா அண்மையில் காரைநகர் மணற்காட்டு முத்துமாரி அம்மன் ஆலயத் தேர் முட்டி கலச அபிஷேக விழாவில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் வாழ்த்துரை வழங்கும் போதேஅவர் இவ்வாறு வினாஎழுப்பினார்

மாவட்ட நீதிமன்ற நியமனப் பெறுநர் வே.நடராசா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள், தீவக வலய கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், யாழ்ற்ரன் கல்லூரி, இந்துக் கல்லூரி அதிபர்களும்,கலந்து கொண்டனர் இந் நிகழ்வில் மாவட்ட நீதிபதி மேலும் கூறுகையில்:இன்றுஆலயங்கள் விரைவாக வளர்ச்சிபெறுகின்றன. சடங்குகள், சம்பிரதாயங்களிற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றன. ஆனால் ஆன்மீகத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. ஆதலால் இளைஞர்களிடத்தே சமாதானம் இல்லை.

அன்பு என்பதே சைவ சமயத்தின் அத்திபாரம் ஆகும். அன்பை வளர்ப்பதினூடாகத்தான் ஆன்மீகத்தைவளர்க்க முடியும்அன்பை வளர்த்தும் மற்றவர்களின் திறமையைக் கண்டுநாம்பொறாமைகொள்ளாதும் வாழப்பழகுவோமானால் எமது சமயம் நிச்சயமாக வளர்ச்சியடையும்.

எமது நாட்டில் இன்று தெரியும் சமாதான ஒளிக்கீற்றை இறுகப்பற்றிதொழில் நுட்ப வளர்ச்சியில் எமது இளைஞர்களை ஈடுபடுத்தி அன்புவழியிலே ஆன்மீகத்தை வளர்த்து உண்மையானசைவ சமயிகளாக வாழ்வதற்கு திடசங்கற்பம் பூணுவோமாக என்று தெரிவித்தார்.

தீவக கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் உரையாற்றுகையில் ஆன்மீகத்தினை வளர்க்கும் பங்கு சிவாச்சாரியர்களிற்கும் உண்டு என்றார் (க-246)

## வாகன அனுமதி பத்திரம் வழங்கல்

2002 ஆம் ஆண்டிற்கான வாகன அனுமதிப் பத்திரங்கள் கோப்பாய் பிரதேச செயலகத்தில்திங்கள், புதன், வெள்ளி ஆகியதினங்களில் காலை9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வனுமதிப் பத்திரங்களுக்கு ஏற்கனவேவரிசெலுத்தியவர்கள் இதற்கான பற்றுச்சீட்டை அலுவலகத்தில் கொடுத்து அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம் என பிரதேச செயலக கணக்காளர் த. குகதாஸ் அறிவித்துள்ளார். (க-233)

## பொலித்தீன் அலங்காரம் செய்வதை தவிர்க்கவும்

(கொழும்பு)

தேர்தல் பிரசாரங்களிற்கு பொலித்தீன்களால் செய்யப்படும் அலங்காரங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அம்பகமுவ பிரதேச சபைத் தலைவர் எம்.இரவீந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொலித்தீன் சூழலுக்கு கூடுதலான தீங்குகளை விளைவிக்கக்கூடியது.இதனை அழிக்கவும் முடியாது. எனவே இதனைஅநாவசியமானமுறையில்பாவிக்காமல்தவிர்ப்பதன் மூலம் சூழல் மாசடைவதைத் தவிர்க்க முடியும்.

புளியாவத்தை நகரில் ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் காரியாலயமொன்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (செ)

## பிரதமரிடம் துணைவேந்தர் அவசர கோரிக்கை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்தினை உருவாக்குவதற்கான அனுமதியை வழங்கும்படி பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தேவைகள்குறித்து பிரதமரிடம் மேலும் கோரியதாவது;

யாழ்ப்பாணத்திலுள்ள மருத்துவ பீடத்துக்கு ஒரு போதனாவைத்தியசாலையை அமைத்தல், வவுனியாவிலுள்ள வளாகத்துக்கு பம்பைமடுவில் ஒரு நிரந்தர கட்டடத்தினை அமைப்பதற்கான நிதியுதவியை வழங்க பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்கு சிபார்சு செய்தல்,

மற்றும் இவ்வருட நிதிஒதுக்கீட்டில் மேற்கொண்ட நிதி வெட்டு விடயத்தில் யாழ்ப்பாணத்துக்கு அக்கறைகாட்டி வேண்டிய நிதியுதவியைவழங்கச் செய்தல் என்பனவாகும். (க-77)

## கேகாலைச் சிறையில் தொற்று நோய் தீவிரம்

(கொழும்பு)

கேகாலைச் சிறைச்சாலையில் தொற்று நோய் தீவிரமாகப் பரவி வருகிறது. ஐந்நூறு கைதிகள் இருக்கின்ற இச்சிறைச்சாலையில் போதிய இடவசதியின்மையினாலேயே இந்நோய் வேகமாகப் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலை வைத்தியசாலைக்கு வைத்தியர் இல்லாததினால், கேகாலை வைத்தியசாலையிலிருந்தே வைத்தியர் ஒருவர் வாரத்தில் இரண்டு தடவைகள் கைதிகளைப் பரிசோதித்து வருகிறார்.

இங்கு கைதி ஒருவருக்கு தொற்றுநோய் ஏதும் ஏற்படும் பட்சத்தில் அவரைப் பிரத்தியேகமாக வைத்து சிகிச்சையளிப்பதற்குபோதிய இடவசதிகள் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (செ)

## கல்வி நிர்வாக சேவையில் 55 வயதிற்கு மேற்பட்ட தகுதியற்றோருக்கு கல்தா

### கல்வி கலாசார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்வி நிர்வாக சேவையில் சகல தரத்திலும் அடிப்படைத் தகுதியில்லாமல் அரசியல் ரீதியான நியமனம் பெற்ற ஐம்பத்திஐந்து வயதிற்கு மேற்பட்ட சகலரும் தமது பதவியிலிருந்து வெளியேற்றப் படுவார்கள் என மனிதவள, கல்வி, கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

ஆனால் அரசியல் ரீதியான நியமனம் பெற்றநபர், குறித்த பதவிக்குரிய அடிப்படைத் தகைமையுள்ளவராயின் அவர் ஐம்பத்திஐந்து வயதை எட்டியிருப்பினும் அவருக்குசேவைக் கால நீடிப்பு வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அடிப்படைத் தகைமையற்றவர்கள் தகுதியற்ற பதவியில் இருப்பதால் கல்வி நிர்வாக சேவையில் தரம் இரண்டிலிருந்து தரம் ஒன்றிற்கு ஆட்சேர்ப்பதற்கு இயலாது உள்ளது என்றும் தெரிவித்தார்.

கல்வி நிர்வாக சேவையில் ஒழுங்கான முகாமைத்துவம் இல்லாமையே இதற்கு முழுமையான காரணமாகும் எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (செ)

## உள்ளூராட்சித் தேர்தல் பாதுகாப்பு கடமையில் 5ஆயிரம் இராணுவத்தினர்

(கொழும்பு)

இந்த மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலின் போது விசேட கலகமடக்கும் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளதாக தேர்தல் செயலக பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்தின தெரிவித்துள்ளார்.

தேவையேற்படும் போது கடமையில் ஈடுபடுத்தும் பொருட்டு 5ஆயிரம் இராணுவத்தினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும்.

தேர்தல் தினத்தன்று ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் கலகமடக்கும்4பொலிஸ் குழுக்களை தயார் நிலையில் வைத்திருக்கும் படி உத்தர விடப்பட்டுள்ளதாகவும் நவரத்தின மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை20ஆம்திகதிதேர்தல்இடம் பெறவுள்ளஇடங்களுக்கு பாதுகாப்பு பணியில் ஈடுபடும் பொலிஸார் அனுப்பப்பட்டுவிட்டதாகவும் இந்த கடமையில் சிவில் அதிகாரிகளும் ஈடுபடுத்தப்படுவர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (உ-5)

## தாமரைக் குளத்தில்இருந்து சிறுமி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

துன்னாலை தெற்கில் உள்ளகுளம் ஒன்றில்தாமரைப் பூ பறிக்கசென்ற சிறுமிஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

துன்னாலைதுணுவில்பிள்ளையார் ஆலயகுளத்தில் நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு தாமரைப்பூ பறிப்பதற்காக குளத்தில் இறங்கிய,அதே இடத்தைச் சேர்ந்த ஆறு வயதுச் சிறுமி அருள்நாயகம் தர்ஷிகா என்பவரே சுழியில் அகப்பட்டு. பலியானவராவார்.

குளத்தில் இருந்து மீட்கப்பட்ட சிறுமியின் சடலம் பிரேதபரிசோதனையின் பின் அவரது தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டது.

மரணவிசாரணையை மரண விசாரணை அதிகாரி இ.கிருபாகரசூரியர் மேற்கொண்டார். (வ)

## மருத்துவ தேவைகள் பூர்த்தியின்றி பெரும் அவதியுறும் நயினை மக்கள்

### அவசர வைத்திய சேவையில் கடற்படையினர்

(தென்மராட்சி)

நயினாதீவில் இயங்கிய அரசினர் வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாமையினால் நயினாதீவு மக்கள்தமது மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பெரும்சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இங்கு கடமையில் ஈடுபட்டிருந்த ஒப்பந்த அடிப்படையில் சேவை செய்த வைத்தியர் தமது ஒப்பந்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து வைத்தியசாலைக்கு வருகை தருவதை நிறுத்திக் கொண்டார்.

இதனால் சாதாரண நோய்களுக்கு கூட மருத்துவ வசதிகளைப் பெற முடியாத நிலையில் இப்பகுதி மக்கள் இருந்து வருகின்றனர்.

அதேவேளை நயினாதீவில் நிலை கொண்டுள்ள கடற்படையினரே இங்குள்ள மக்களுக்கான அவசர வைத்திய சேவைகளை வழங்கிவருகின்றனர் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

நயினாதீவு வைத்தியசாலைக்கு ஒரு வைத்தியரை நியமித்துத் தரும்படி இப்பகுதி மக்கள் சுகாதார சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விட்டிருந்தும் கூட அக் கோரிக்கை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர். (க-77)

## நிர்வாகப் பொறுப்பாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்டதலைமைச் செயலகத்தின்நிர்வாகப் பொறுப்பாளராகயாழ்.மாநகராட்சி மன்றஉறுப்பினர்செல்லையா விஜயரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார். (உ)

## சிரமதானம்

(தென்மராட்சி)

மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சிகண்ணகை அம்மன் ஆலயஉற்சவத்தைமுன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபை கடந்த சனிக்கிழமை ஆலய வளவில் சிரமதானப் பணியை மேற்கொண்டது.

பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையாவின தலைமையில் இடம்பெற்ற இச்சிரமதானப்பணியில் ஈ.பி ஆர்.எல்.எவ் (வரதர்அணி) யைச் சேர்ந்த உறுப்பினர்களும் தொண்டர்களும் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றியிருந்தனர்.

★ ★ ★

(தென்மராட்சி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் எற்பாட்டில் ஈ.பி.ஆர்.எல்.எவ்(வரதர்அணி)யின் அனுசரணையுடன் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் மாபெரும்சிரமதானப் பணி நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

இப்பணியில் நூற்றுக்கணக்கானவர்கள் ஈடுபட்டு யுத்தத்தின் போதுசேதமாக்கப்பட்ட பாடசாலையின் சுற்றாடல்களைத் துப்புரவு செய்தனர்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நான்காவது சிரமதானப்பணி இது வாகும். (உ-77)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ். நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம் நேற்று சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் உட்படப் பலர் இச் சிரமதானப் பணியில்பங்கு கொண்டனர். (உ-124)

★ ★ ★

(ஊர்காவற்றுறை)

புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் கோயில்வளாகத்தினை வேலணைப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சிரமதானத்தின் மூலம் அண்மையில் துப்புரவு செய்துள்ளனர்.

அரசின் நூறுநாள் துரித வேலைத் திட்டத்தின் கீழ் மேற்படி சிரமதானம் செய்யப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் வேலணைப் பிரதேசசெயலர் பிரிவிக்குட்பட்ட பகுதியில் சிரமதான வேலைத்திட்டங்களில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபடவுள்ளனர். (உ-75)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டமட்ட பாடசாலைகளுக்கான வரலாறும் சமூகக்கல்வியும் கட்புல சாதனப் போட்டியும், கண்காட்சியும் இன்று மு.ப.10.00 மணிக்கு கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கோட்ட மட்டத்திலிருந்து வலய மட்டத்திற்கு தெரிவு செய்யப்படும் ஆக்கங்களின் கண்காட்சி 23 ஆம் திகதி சனிக்கிழமை கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது- (உ-3)

# தொடர் போராட்டங்களுக்கு தயாராகின்றனர்

# யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை வழங்கவேண்டும் என சம்பந்தப்பட்ட தரப்புக்களைக் கோரியுள்ளோம்.

இக்கோரிக்கைக்குச் சாதகமான பதில்கள் விரைவில் கிடைக்காதவிடத்து பல்வேறு வகையான தொடர் போராட்டங்களில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், யாழ். மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் கடந்த சில வருடங்களாக வேலை வாய்ப்புக்கள் ஏதும் வழங்கப் படவில்லை.

இம்மாவட்டத்தில் பட்டம் பெற்று கடந்த நான்கு வருடங்களாக எந்தவித வேலை வாய்ப்பும் இன்றி நாம் விரக்தியுற்றுள்ளோம். எம் வேலை வாய்ப்பு விடயமாக கடந்த கால ஆட்சியாளர்களிடமும் கல்வி அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்ட போதும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை.

தற்போது வாக்குறுதிகளை அள்ளி வழங்கி ஆட்சியைக் கைப்பற்றியவர்களும் பட்டதாரிகள் வேலை வாய்ப்பு விடயத்தில்எந்தவித அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை.

ஒவ்வொரு பட்டதாரியினதும் பெற்றோரின் கனவுகள், எதிர்பார்ப்புக்கள், உயர் கல்வி வாய்ப்பைப் பெற்ற தம் பிள்ளைகள் குடும்ப பொருளாதாரச் சுமைகளைத் தாங்குவார்கள் என்பதே.

ஆனால் நாங்கள் பொருளாதாரக் கஷ்டங்கள் போர்க்கால அனர்த்தங்கள் அனைத்திற்கும் முகங்கொடுத்து முகுளித்துப் போனது, வேலையற்று நான்கு வருடங்கள் காத்திருக்கவா?

எம் எதிர்கால வாழ்விற்கு யார் பதில் கூறுவார்கள்? கிளர்ந்தெழும் எம் உண்மை நிலையை யாவரும் அறிய வேண்டும். எமது நிலைக்கு சுமுகமான தீர்வு கிடைக்க வேண்டும்.

தொடர்ந்தும் இந்நிலைக்கு நாம் தள்ளப்படுவோமானால் எமது பட்டதாரிகள் நியமனத்தினை பெறும் வரையில் தொடர் போராட்டங்களில் ஈடுபடத்தீர்மானித்துள்ளோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# பொலிஸார் மீது எனக்கு நம்பிக்கையில்லை

# தேர்தல் பணியில் படையினரை ஈடுபடுத்துக!

## ஜனாதிபதி உள்துறை அமைச்சருக்கு கடிதம்

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில்பொலிஸாருக்கு உதவியாக இராணுவத்தினரையும் ஈடுபடுத்தும்படி ஜனாதிபதி சந்திரிகா உள்துறை அமைச்சர்ஜோன்அமரதுங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

சட்டத்தையும்ஒழுங்கையும் பேணும் விடயத்தில் பொலிஸார் மீதுஎனக்கும்பொதுஜன ஐக்கிய முன்னணியினருக்கும் நம்பிக்கையில்லை.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான பிரசார வேலைகளில் ஈடுபடும் பொதுஜனஐக்கிய முன்னணி வேட்பாளர்களும் ஆதரவாளர்களும்ஐக்கியதேசியக் கட்சியினால் அச்சுறுத்தப்படுகின்றனர்.

பொய்க் குற்றச்சாட்டின் பேரில் கட்சி ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டு விளக்க மறியலிலும்வைக்கப்படுகின்றனர்.

இதன் மூலம் பொலிஸார் பாரபட்சமாக நடந்து கொள்கின்றனர் என்பது புலனாகிறது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாகவும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனால், தேர்தல் பணிகளில் இராணுவத்தினரையும் ஈடுபடுத்துவதே ஊசிதமானதென தான் கருதுவதாகவும் இது தொடர்பான தீர்மானமொன்றை உடனடியாக எடுக்குமாறும் ஜனாதிபதிஉள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்காவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரியுள்ளார். (உ-5)

## அறிவிக்கப் பிந்தியதனாலேயே

# அமெ. இராஜாங்க அமைச்சரை

# ஜனாதிபதி சந்திக்க முடியவில்லை

## ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தெற்காசியாவிற்கான அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்ரீனா றொக்கா ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு மிகக்குறுகிய கால அறிவித்தல் கொடுத்திருந்ததனாலேயே அவரைச் சந்திக்க முடியவில்லை என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

கிறிஸ்ரீனா றொக்காவைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி மறுத்துவிட்டார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனை மறுத்தே ஜனாதிபதி செயலகம் மேற்கண்டவாறு அறிக்கை வெளியிட்டது.

கிறிஸ்ரீனா றொக்கா ஜனாதிபதிக்கு அறிவித்தல் கொடுப்பதற்கு முன்னரே அவர் வேறு பணிகளை முடித்துக் கொண்டு கொழும்பிலிருந்து செல்ல வேண்டியிருந்தது. இதனாலேயே அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சரைச் சந்திக்க முடியவில்லை எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## மீட்புமுயற்சி

### கைவிடப்பட்டது

(லண்டன்)

கொங்கொங் கடலில் மூழ்கிய 7 மாலுமிகளைத் தேடும் முயற்சியை மீட்பாளர்கள் கைவிட்டுள்ளனர்.

அவர்கள் இறந்திருக்கலாம் எனப் பரவலாக நம்பப்படுகிறது. (உ)

## கல்வியியற் கல்லூரி

# கட்டடத்திற்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இடைக்கால ஏற்பாடாக உலக வங்கியின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று காலை 6.00 மணிக்கு கோப்பாய் இராச வீதியில் உள்ள கல்லூரியின் காணியில் இடம் பெற்றது.

பீடாதிபதி திருநாவுக்கரசு கமலநாதன் அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் கல்வியியலாளர்கள், சமூக சேவையாளர்கள் கல்வியியற் கல்லூரி சமூகத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ-19)

# தீவக பிரதேச செயலக குழுப் போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான குழுப்போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

உதைபந்தாட்டம்

முதலாமிடம்:- வேலணை துறையூர் ஐயனார் வி.க.
இரண்டாமிடம்:- நயினாதீவு அண்ணா வி.க.

கபடி

முதலாமிடம்-வேலணை ஐயனார் வி.க. இரண்டாமிடம்-வேலணை அம்பிகை நகர் உதயசூரியன் வி.க.

எல்லே

முதலாமிடம்-வேலணை ஐயனார் வி.க. இரண்டாமிடம்-நயினாதீவு இஸ்லாமிய வி.க.

வலைப்பந்தாட்டம்

முதலாமிடம்-ஐயனார் வி.க. இரண்டாமிடம்- அண்ணா வி.க.

கரப்பந்தாட்டம்

முதலாமிடம்- அம்பிகைநகர் உதயசூரியன் வி.க. இரண்டாமிடம்-அண்ணா வி.க. (உ-75)

## தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில்

# 52 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த

# 6703 குடும்பங்கள் மீள குடியமர்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 60 கிராம சேவையாளர் பிரிவுகளில் வாழ்ந்து வந்த 19 ஆயிரத்து 763 குடும்பங்களுள் தற்போது 6 ஆயிரத்து 703 குடும்பங்கள் மட்டுமே மீளக் குடியமர்ந்துள்ளன.

இதில் தற்போது 52 கிராம சேவையாளர் பிரிவுகளில் மட்டுமே பொதுமக்கள் மீளக் குடியமர பாதுகாப்பு தரப்பினர் அனுமதியளித்துள்ளனர்.

மீதியான 8 கிராம சேவையாளர் பிரிவுகளில் பொதுமக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இதே சமயம் தற்போது மீளக்குடியமர்ந்த6 ஆயிரத்து 703 குடும்பங்களைத் தவிர மீதியான 13 ஆயிரத்து 60 குடும்பங்கள் வடமராட்சி வலிகாமம் மற்றும் தென் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றன.

எழுதுமட்டுவாள் தெற்கு, எழுதுமட்டுவாள் வடக்கு, கரம்பகம்- ஒட்டுவெளி, மறவன்புலவு, தனங்கிளப்பு, கோயிலாக்கண்டி போன்ற இடங்களைச் சேர்ந்த குடும்பங்கள் தம்மைத் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கும்படி கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு நலன் கருதி மேற்படி கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளக்குடியமரப் பொதுக்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் தெரியவருகின்றது. (உ-77)

## கண்ணிவெடிகள் அகற்றும் பணி முழுமூரம்

(உடுவில்)

சுன்னாகம் ஜே. 198 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட சுளானையில் 513 வது பிரிகேட் உதவியுடன்கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் மிகத்துரித கதியில் இடம் பெற்று வருகின்றன.

இப்பகுதி மக்கள் கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக இடம் பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-129)

## இன்று ஒரு தகவல்

# மனிதநேயம் மருந்து

சார்! நமது உடலை நாம் நல்லபடியாக வைத்திருக்க வேண்டும் என்றுதான் எல்லோரும் ஆசைப்படுகிறோம். சரி! இதற்குஎன்ன வழி?என்று கேட்டால் விபரம் தெரிந்தவர்கள் மூன்று வழியைச் சொல்கிறார்கள். அதாவது நல்லஉணவு, தேவையான தேகப்பயிற்சி, கவலைப்படாமல் இருப்பது மூன்றும் தான் அதற்கு வழியாம். இந்த மூன்றிலும் நாம் கொஞ்சம் கவனம்செலுத்த ஆரம்பித்தால் எந்தநோயும் நம்மிடம் நெருங்கமுடியாதென்று பெரிய டாக்டர்கள் சொல்கிறார்கள். இதுவரையும் சரி: அவர்கள் சொல்வதும் ஒருவிதத்தில் நியாயமாகத் தெரிந்தது. இப்போது நாலாவதாக ஒரு விஷயத்தை அத்துடன் சேர்த்திருக்கிறார்கள்-அதுதான் கொஞ்சம் வேடிக்கையாக இருக்கிறது. என்ன தெரியுமா? மனிதநேயம்.

மற்றவர்களை நேசியுங்கள் அடிக்கடி மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள். அது உங்கள் உடல்நலத்துக்கு நல்லது என்கிறார்கள். அடுத்தவர்களை நேசிப்பதற்கும் நமதுஉடல் நன்றாக இருப்பதற்கும் என்னசம்பந்தம்? கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற மருத்துவத்துறை பேராசிரியர்டாக்டர் கென்னத் பிரிடியர் இதற்கு விளக்கம் கொடுக்கிறார். பொதுவாக நாம் மற்றவர்களுக்கு உதவிசெய்கிறபோது அல்லது மற்றவர்களை நேசிக்கிறபோது நாம் மகிழ்ச்சியோடு இருக்கிறோம் அதேசமயத்தில்நமது உடலில் இருக்கும் நோயை எதிர்க்கிற தன்மைகொண்ட செல்கள் முழு சக்தியோடு இயங்குகின்றன. அப்படி அவைகள் இயங்குகின்ற பொழுது நமது உடம்பில் நோய் எதுவும் வருவதில்லை என்கிறார் அவர்.

ஆனால், அதேசமயம் நாம் கவலையோடு இருக்கிறபோது, தனிமையாக வாழ்கிறபொழுது நோய் தடுப்பு செல்கள் உடலில் குறைவாகவே இருக்கின்றன என்று இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். அதனால் இப்படிப்பட்டவர்களுக்கு பிணிகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறதென்கிறார் அந்த டாக்டர். இது சம்பந்தமாக சான்பிரான்சிஸ்கோவில் ஒரு ஆராய்ச்சியே நடத்திப் பார்த்திருக்கிறார்கள். எப்படி தெரியுமா? குடும்பத்தை விட்டுப் பிரிந்து தனியாக வாழ்ந்து சொண்டிருக்கிற முதியோர் பலரைத் தேடிக்கண்டுபிடித்தார்கள். இங்கென்றால் தேடாமலே கண்டுபிடித்துவிடலாம். அங்கு தேடவேண்டியிருந்தது. அந்தப் பெரியவர்களுக்கு உடலில் என்னென்ன நோய்கள் இருக்கின்றனவென்று விபரமாககுறித்து வைத்துக் கொண்டார்கள்.

அவர்களைஒன்றாகசேர்த்து ஒரே இடத்தில் தங்க வைத்தார்கள். அவர்களை மூன்று பிரிவாகப் பிரித்தார்கள். ஒவ்வொரு பிரிவிற்கும் மற்றவர்களுக்கு உதவி செய்கிறமாதிரியான பொறுப்புக்களைக் கொடுத்தார்கள் உதாரணமாக ஒரு பிரிவுக்கு சிறைச்சாலைக்கு போய் உபதேசம் செய்யும் வேலை. இன்னொரு பிரிவுக்கு சின்னப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிற வேலை. இப்படிப் பொறுப்புகளை கொடுத்த பின்னர் அந்த தாத்தாக்கள் மிகவும் சுறுசுறுப்பாகி விட்டார்களாம், ஆறு மாதங்கள் கழித்து அவர்களின் உடலைப் பரிசோதனை செய்து பார்த்த போது, நோயின் தன்மை அனேகமானவர்களுக்கு குறைந்து இருப்பது தெரியவந்ததாம்.

மற்றவர்களுக்கு உதவுவதென்பது ஒரு வகையான மனித நேயம். இதை ஆங்கிலத்தில் **alquism** என்று சொல்கிறார்கள். நமது ஊர் ஆன்மீகவாதிகள் மற்றவர்களுக்கு உதவுங்கள் என்று சொன்னால் நாம் விவாதம் செய்ய ஆரம்பிக்கிறோம். இப்போது விஞ்ஞானிகள் சொல்வதனால் வேறு வழியில்லாமல் கேட்டுக்கொள்கிறோம், இந்தக் காலத்தில் எதுவாக இருந்தாலும் ஒரு நிரூபணம் தேவைப்படுகிறது. அது தான் கஷ்டம் அது இருக்கட்டும். இப்போது நாம் எந்த அளவுக்கு மற்றவர்களுக்கு உதவியாகஇருக்கின்றோம். இதற்கு ஒரு நிரூபணம் பார்ப்போமா?

ஒரு பட்டின பஸ் போய்க் கொண்டிருந்தது. ஒரு பெரிய ஆள், பெரிய ஒரு மூடையின் மேலே உட்கார்ந்து கொண்டிருந்தார். மிகவும் நெருக்கடியான இடம். நின்றுகொண்டு பிரயாணம்செய்கிறவர்களுக்கு மிகுந்த இடைஞ்சலாக இருக்கிறது. கொண்டக்டர் கத்திக் கத்திப் பார்த்தார். அந்த ஆள் அசையவில்லை. அந்த மூடையின் மேலேயே உட்கார்ந்திருந்தார். ஒரு பஸ் நிறுத்தத்தில் பஸ் நின்றது. கொண்டக்டருக்கு மிகுந்த கோபம் உண்டாகியது. அந்த மூடையை உருட்டி வெளியே தள்ளிவிட்டார். அப்போதும் அந்த ஆசாமி கவலைப்படவில்லை. என்ன சார்! உங்களுக்குப் கோபமே வரவில்லையா? என்று பக்கத்திலிருந்தவர்கேட்டார். அதற்கு அந்த ஆள் 'நான் எதற்காகக் கவலைப்படவேண்டும். அந்த மூடை என்னுடையதல்லவே' என்றாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# உதைபந்தாட்ட அணி யாழில் விளையாட பாக்.அரசு தடை

(கொழும்பு)

பாகிஸ்தான் உதைபந்தாட்ட அணி இலங்கையில் நடத்த இருக்கும் சுற்றுப் போட்டியின் முடிவில் இம்மாத இறுதியில்யாழ்ப்பாணத்தில் இறுதிப்போட்டி ஒன்றில் கலந்துகொள்ள அந்நாட்டு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

பாதுகாப்புக் காரணங்களை கருத்திற் கொண்டு தமது அணி விளையாடுவதை பாகிஸ்தான் அரசு விரும்பவில்லை என்று அந்நாட்டுப் பயிற்சியாளர் சித்திக்ஷெய்க் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைத் தேசிய அணி பாகிஸ்தான் உதைபந்தாட்ட அணி ஆகியன பங்கேற்கும் மேற்படி உதைபந்தாட்டப்போட்டியை ஒட்டி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கம் செம்மைப்படுத்தப்பட்டு வந்தது தெரிந்ததே. (உ)

## விளக்கு வைப்பு உற்சவம்

(சுழிபுரம்)

சுழிபுரம் பத்திரகாளி கோவில் வருடாந்த பங்குனி மாத விளக்கு வைக்கும் உற்சவம் இன்று ஆரம்பமாகவுள்ளது. (உ-10)

# வழக்குகள் தொடுக்கப்படுவதில் வழமைக்கு மாறான முறைகள்

## சட்டமா அதிபரிடம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வழக்குகள் தொடுக்கப்படுவதில் சில வழமைக்குமாறான முறைகள் பின்பற்றப்பட்டிருக்கின்றமை போதிய சான்றுகள் இல்லை எனக் கூறி குற்றச்சாட்டுகள் கைவிடப்படுகின்றன ஆகியனதொடர்பாக சட்டமா அதிபர்திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி சிலர் வெள்ளிக்கிழமையன்று சட்டமா அதிபர் கே.சீ.கமலசபேசனை சந்தித்து விளக்கியுள்ளனர்.

அண்மையில் 'அற்லஸ் லங்கா' எனப்படும் விவகாரம் தொடர்பாக, சட்டமாஅதிபர் திணைக்களத்திடம்சான்றுகள் இல்லை என அரச சட்டத்தரணி கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதனால் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இவ் வழக்கில் பெரு நாட்டுகடவுச்சீட்டுகள் வைத்திருந்ததாக யாழ்ப்பாணத்தவர்கள் சிலர் பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக தாம் நேரில்வந்து சாட்சியமளிக்க விருப்பதாக பெருநாட்டின் குடிவரவு அதிகாரிகள் கொழும்பு சீ.ஐ.டீ.பிரிவுக்கு அறிவித்திருந்த போதும் இது தொடர்பான விவகாரங்கள் முடிவு செய்யப்படுவதற்கிடையில் அரச தரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்தில்குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுவிக்குமாறு கேட்டிருந்தார்.

இப்படியான விவகாரங்கள் தொடர்பாக முன்னர் அரச சட்டத்தரணியாகபணியாற்றி இப்பொழுது தனிப்பட்ட முறையில் பயிற்சியிலீடுபட்டு வரும் ஒருவரின் பெயரும் சந்திப்பின் போது பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

பல விவகாரங்களில்முறைப்படியான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் விடப்பட்டிருக்கிறதென்றும் இது கவலைக்குரியதும் திணைக்களத்தின்நேர்மைக்கு இழுக்கானது எனவும்மேற்படி சிரேஷ்டஅதிகாரிகள்சட்டமா அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

முக்கியமாக குடிவரவு, மனிதக்கடத்தல் விவகாரங்கள் தொடர்பான விவகாரங்களில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமெனவும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (உ)

## அலங்கார உற்சவம்

(சண்டிலிப்பாய்)

ஆனைக்கோட்டை ஆலடி ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. (செ-125)

## தவக்கால ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும்தவக்கால ஆற்றுகை கல்வாரி யாகம் திருப்பாடுகளின் காட்சிஇன்று தொடக்கம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 6.45 மணிக்கு மன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு 21 ஆம் திகதி இடம்பெறமாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## நெஞ்சுறுத்தும் கானல்

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனமும் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நிகழ்த்தும் 'நெஞ்சுறுத்தும் கானல்' மிதிவெடி விழிப்புணர்வுஆற்றுகைஇன்று மு.ப. 11.30மணிக்குமானிப்பாய்இந்துக்கல்லூரியில்இடம்பெறவுள்ளது. (உ-3)

## பொன்னாலையில் மீன்பிடிக்க அனுமதி

(காரைநகர்)

பொன்னாலை பாலத்தின் இருமருங்கிலும் மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு கடற்படையினர் அனுமதித்துள்ளனர். கடந்த ஐந்து வருடங்களிற்கு மேலாக மேற்படி பாலத்தில் எவரும் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. தற்போது நாட்டில் நிலவும் அமைதியை அடுத்தே படையினர் மீனவர்களை தொழில் செய்ய அனுமதித்துள்ளனர். (ந-233)

அரசமைப்பு சபை அமைக்காமை

## நீதித் துறைக்குப் பெரும் பின்னடைவு

(கொழும்பு)

அரசமைப்புச் சபை அமைக்கப்படுவதில் ஏற்படும் தாமதங்களால் மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியனவற்றிற்கு நீதிபதிகளையோ, வேறு உயர் பதவிகளுக்குரியவர்களையோ நியமிக்க முடியாதநிலைதோன்றியுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி தனது பிரதிநிதியாக ஒருவரை அரசமைப்புச் சபைக்கு நியமிப்பதை தாமதிப்பதனால், 17 வது திருத்தச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டபடி ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியாதுள்ளதாகஅமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வியாழனன்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## நிதியுதவி வழங்குமாறு சர்வதேசத்திடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்று வரும்சமாதானமுயற்சிகளுக்கு கணிசமானஅளவு நிதியுதவிகளை வழங்கவேண்டும்என ஐரோப்பிய நாடாளுமன்றம் சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துளளது.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலானபோர் நிறுத்தத்தை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது.

அத்துடன் சமாதான முயற்சிகளில் நோர்வே அரசாங்கத்தின் பங்களிப்பையும் அங்கீகரித்துள்ளதுடன் இருதரப்பினருக்கிடையிலும் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கான தேவையினையும் வலியுறுத்தியுள்ளது. (செ)

## துவிச்சக்கர வண்டிகள் பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

களவாடப்பட்ட இரு ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் ஒரு பெண்களுக்கான துவிச்சக்கர வண்டி மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் என்பன ஊர்காவற்றுறைப் பகுதியில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

பொது மக்கள் கொடுத்த தகவலின் பேரில் இன்ஸ்பெக்டர் நவரட்ணம் திஸநாயக்க தலைமையிலான குழுவினர் இவற்றை மீட்டுள்ளனர்.

இதேவேளை, முன்னர் மீட்கப்பட்ட எம்.ரி-90 ரக மற்று சாலி மோட்டார்சைக்கிள்கள் இன்னமும் உரியவர்களால் அடையாளம் காட்டப்படாத நிலையில் உள்ளதாக இன்ஸ்பெக்டர் தெரிவித்தார். (உ-19)

## சிரமதானப் பணியில் படையினரும் பங்கேற்பு

யுத்தத்தினால் சேதமாக்கப்பட்ட மட்டுவில் மகாவித்தியாலத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட மாபெரும் சிரமதானப் பணியில் பொது மக்களுடன் 522 படையணியைச் சேர்ந்த படையினரும் பெருமளவில் பங்கு கொண்டு துப்புரவுப் பணியில்ஈடுபட்டிருந்தனர்.

மட்டுவில் தெற்கு கிராம சேவையாளர் க.வாமதேவன் ஏற்பாடு செய்திருந்த இச்சிரமதானப் பணியில் அப்பகுதி பொது அமைப்புகள், சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் ஈ.பி.ஆர்.எல் எவ். (வரதர் அணி) யினரும் பங்கு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வித்தியாலய அதிபர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும்கலந்து கொண்டிருந்தனர். (உ-77)

## சிந்தனைக்கு விருந்து

**எழுபது கடந்தவர் ஏறினார் விண்ணில்**

பெற்றிடு பிள்ளை கட்டிய மனைவி
பேசவும் செவிமடுக் காது
பற்றியே சைக்கிள் 'பெடலி'னை மிதித்துப்
பாய்ந்துமே ஏறுவீ ரர்போல்
சற்றுமே வீதி ஒழுங்கினைக் கருதார்
சடுதியில் 'லொறி'யுடன் மோதிப்
பெற்றனர் விண்ணா டுறைகின்ற பேறு
பெரியவர் எழுபது கடந்தோர்.

-பழையவன்

# தென்மராட்சியில் 7 நெசவு நிலையங்கள் முற்றாகச் சேதம்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இயங்கிய சிறுகைத்தொழில் திணைக்களத்தின் 7 நெசவு நிலையங்கள் யுத்தத்தின் காரணமாக முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் நெசவு உபகரணங்களும் இழக்கப்பட்டு விட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

மந்துவில், சரசாலை, கல்வயல், மட்டுவில் தெற்கு (வேரக்சேணி), விடத்தல்பளை, நாவற்குழி, சைதடி ஆகிய இடங்களில் இயங்கிய நெசவு நிலையங்கள் முற்றாக அழிந்துவிட்டன.

இவற்றிலிருந்து 50க்கு மேலான நெசவ தறிகள், உபகரணங்கள் மற்றும் நெசவுக்கான பாடநூல்களும் இல்லாமல் போயுள்ளன என்றார்.

இந்த நெசவு நிலையங்களில் தொழில் செய்து வந்த நெசவாளர்கள் நமது வேலைகளை இழந்துள்ளமையையும்சுட்டிக் காட்டினார்.

அதேவேளை, இந்த நெசவு நிலையங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் பற்றிய விரிவான அறிக்கை ஒன்று திருகோணமலையிலுள்ள சிறுகைத் தொழில் திணைக்களத்தில் பணிப்பாளர் செல்வின் இரேனியசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(உ- 77)

## கூட்டம்

(காரைநகர்)

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களிற்கான செயற்பாடுகள் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10.00 மணியளவில் ஊர்காவபறுறை உதவி அரச அதிண் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுதுற்ளர்

(உ- 246)

# கிறிஸ்ரீனா றொக்கா பாகிஸ்தான் விரைவு

(கொழும்பு)

தெற்காசியாவிற்கான அமெரிக்க உதவி வெளிவிவகார துணை அமைச்சர் கிறிஸ்ரீனா றொக்கா இந்தியத் தலைவர்களுடன் நேற்று நடத்தவிருந்த பேச்சுவார்த்தைகளை ரத்துச் செய்துவிட்டு பாகிஸ்தானுக்குச் சென்றுள்ளார்.

பாகிஸ்தானில் தேவாலயம் ஒன்றில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலினாலேயே இவர் தமது இந்திய விஜயத்தை உடனடியாக ரத்துச் செய்து விட்டு பாகிஸ்தானுக்குச் சென்றார்.

மேற்படி தேவாலயத்தில் கொல்லப்பட்ட இரண்டு அமெரிக்கர்களது சடலங்களை தான் அமெரிக்காவிற்கு கொண்டு செல்லப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சடலங்களுடன் தான் அமெரிக்கா செல்லவேண்டியிருப்பதனாலேயே தனது இந்திய விஜயத்தை ரத்துச்செய்துகொண்டுபாகிஸ்தான் சென்றதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ெ

# அமெரிக்க அறிவிப்புக்கு சீனா கடும் எதிர்ப்பு

(பீஜிங்)

தாய்வான் நீர்சந்தியில் போர் மூளுமாயின், அமெரிக்கா ஆதரவாக அணு ஆயுதங்களை பயன்படுத்தும் என்ற செய்திக்கு சீனா கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சீனாவிலுள்ள அமெரிக்கத் தூதுவர் கிளார்க் கிறாஞ்சை, சீன வெளிவிவகார அமைச்சு அழைத்து எதிர்ப்புக்கடிதமொன்றைக் கொடுத்துள்ளார்.

(து)

# பாக். தேர்தலில் பெனாஸிர் போட்டியிடுவது உறுதி

(லண்டன்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ நடைபெற இருக்கும் தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை லண்டனில் வெளியிட்டசெய்தியில் தான் வரும் ஓகஸ்ட் மாதம் பாகிஸ்தான் திரும்பப் போவதாகவும், நடைபெறும் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் அறிவித்தார்.

இதேவேளை, அதிபர் ஜெனரல் முஷாரப்பின் அரசு தனது வருகையைத் தடுத்துவிட முடியாதென்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில் பெனாஸிர் பூட்டோ தேர்தலில் போட்டியிட முடியாதென்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அறிக்கையொன்று வெளியிட்டிருப்பது ஜனநாயக் கொள்கைக்கு விரோதமானதும் சட்டவிரோத்மானதும் அரசியல்சாசனதுக்குப்புறம்பானதென்றும் பாகிஸ்தான்மக்கள் கட்சியின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சியில் முக்கிய எதிரியான நவாஷ்ஷெரிப்போட்டியிடாததால் பெனாஸிர் பூட்டோவுக்கு தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகமாக இருப்பதாக இலண்டனிலிருந்து வெளிவரும் பத்திரிகை யொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(து)

# அன்னை பூபதி நினைவாக சிறுவர் பூங்கா அமைப்பதும் புரிந்துணர்வு ஒப்பந்த மீறலாம்

(மட்டக்களப்பு)

அன்னை பூபதி நினைவாக மட்டக்களப்பு நாவலடியில் சிறுவர்பூங்கா அமைக்கப்படுவது அரசும்-புலிகளும் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும்செயலாகும்.

எனவே மாநகரசபை கட்டட நிர்மாணத்திற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று 233 வது படைப்பிரிவு கட்டளை அதிகாரி லெப்டினன்ற் கேணல் வி. எல். ஆர். அன்ரனீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டஅரச அதிபர் மண்முனை வடக்கு பிரதேச செயலர், மாநகர ஆணையாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குணவர்த்தன ஆகியோரை அழைத்தே இந்த உத்தரவை வழங்கினார்.

அன்னைபூபதி சாதாரண குடும்பப் பெண்ணாக இருந்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த 13 வருடமாக நினைவுகூர்ந்து வருகிறார்கள்.

இதன்மூலம் தமது அமைப்புக்கு பெண் உறுப்பினர்களை ஈர்த்து வருகிறார்கள் எனவே கட்டட நிர்மாணப் பணிகளை நிறுத்த உத்தரவிடவேண்டும்என அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

மாநகர ஆணையாளர் எஸ். நவநீதன் கருத்து கூறுகையில்;

கட்டட நிர்மாணப் பணிகளை உடனடியாக நிறுத்த முடியாது, அத்தோடு சட்டபூர்வமாக விண்ணப்பித்துள்ளார்கள்.

நகர அபிவிருத்திக் குழுகூடி கட்டட வரைபடத்தில் ஏதாவது குறைபாடு இருந்தால் மட்டும் 14 நாள் முன்னறிவித்தல்கொடுத்து நிறுத்த முடியும்என்று குறிப்பிட்டார்.

## கஜூரினா விபத்தில் 4 பேர்காயம்

(காரைநகர்)

காரைநகர் கஜூரினா கடற்கரைக்குச் சென்றவர்களின் மோட்டார் வாகனம் ஒன்று தென்னை மரத்தில் மோதி விபத்திற்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த நால்வர் காயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காரைநகர் சிவன்கோயிலுக்கு அருகாமையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இவ்விபத்துச் சம்பவத்தில் காயங்களுக்குள்ளானவர்கள் உரும்பிராயைச் சேர்ந்தவர்களென தெரிவிக்கப்படுகிறது.

(வ-246)

# மீளகுடியமர அனுமதிகோரி பிரதமருக்கு மகஜர்

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள எழுதுமட்டுவாள் தெற்கு-வடக்கு கரம்பகம் ஒட்டுவெளி ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் வாழ்ந்த 700 க்கு மேற்பட்ட குடும்பங்கள் தம்மை தமது கிராமங்களில் மீளவும் குடியமர அனுமதிக்கும்படி கோரி பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவிடம் அண்மையில் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

இம் மாதம் 15 ஆம் திகதி இமமகஜரை அப்பகுதி மக்களின் சார்பாக ஆசிரியர் வி. கனகராஜா புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா ஊடாக பிரதமரிடம் கையளித்துள்ளார்.

இப்பகுதியைச் சேர்ந்த குடும்பங்கள், 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-77)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாச்சபை நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் யமகா வி. க. எதிர் நீர்வேலி ஐக்கியம் வி. கழகம் மோதவுள்ளன.

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெவுள்ளன.

(க-3)

## விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/கலட்டி மெ.மி. த. க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் வி.என். விஜயகுமார் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ்.ஸ்ரீதயாளன் கலந்து கொளளவுள்ளார்.

(உ-9)

# பங்களாதேஷில் முஜிபூர் படங்கள் அரச மட்டத்தில் எதிர்ப்பு

(டாக்கா)

பங்களாதேஷின் சிற்பியான ஷேக் முஜிபூர் ரகுமானின் நினைவு தினத்தைக் கொண்டாடுவதில் அரசுக்கும் மக்களுக்குமிடையே இழுபறி ஏற்பட்டுள்ளது.

ரகுமானின் நினைவு தினத்தை அவாமி லீக் கட்சியினர் வெகு சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். நாடு பூராகவும் முஜிபூரின் நினைவாக படங்கள்வைத்து விழாக்கள் எடுக்கின்றனர்.

இதேவேளை அரசோ அவரின் நினைவைக் கொண்டாட முபடவில்லை. அதற்குப்பதிலாக அரசகாரியாலயங்களில் தொங்க விடப்பட்ட முஜிபூரின் படங்களை அகற்றுவதிலும் காரியாலயக் கோவைகளிலுள்ளபடங்களை அகற்றுவதிலும் மும்முரமாக இருக்கிறது.

இதேவேளை பங்களாதேஷ் பாராளுமன்றத்திலும் முஜிபூர் ரகுமானின் படங்களை அகற்றுவது தொடர்பான மசோதா வந்திருக்கிறது.

(து)

# போர்த்துக்கல் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகக் கட்சிவெற்றி

(லிஸ்பொன்)

போர்த்துக்கல் நாட்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சியான சமூகஜனநாயகக்கட்சி வெற்றி பெற்றுள்ளது.

தேர்தல் முடிவுகள் முழுமையாக அறிவிக்கப்பட்ட நிலையில் சமூக ஜனநாயகக் கட்சி 40.12 வீதமான வாக்குகளையும், ஆளும் கட்சியான சோசலிஷக்கட்சி 87.85 வீதமான வாககுகளையும் பெற்றுள்ளன.

எனினும், பாராளுமன்றம் அமைப்பதற்கு தேவையான 44 வீதமான வாக்குகளை எந்தவொரு கட்சியும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-5)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கோப்பாய்)

யா. கோப்பாய் நாவலர் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வை. குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர் கு. திருக்குமரன், உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் த. திருக்குமரன், கோப்பாய்க்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம், ஓய்வு பெற்ற அதிபர் அ. சுப்பிரமணியம், புள்ளிவிபர உத்தியோகத்தர் து. ஸ்ரீகரன் ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-79)

(வண்ணை வைத்தீஸ்வரன் உற்சவ காலப் பாடல்)

## அமைதியைத் தாருமையா

இராகம்: பாகேஸ்ரீ தாளம்: ஆதி

ஆன்மீகம் பேசுவோரால் அரன்துதி அடுகலாச்சு
நான் வாழும் நோக்கிலிங்கே நரர்துதி ஓங்கலாச்சு
மான் மழுத் தாங்கி மண்ணில் மமதையை
ஒழித்தவனே
மீன்விழி தையல்பாகா மேன்மையாய்ப்
பொறுத்தருள்க

தமிழோங்கும் யாழ் நகரின் பெருந்தெரு அருகிலிங்கு
புகழோங்கும் கோவில் கொண்டு பொலிவுடன்
அருள்பவனே
இருளோங்கி இடம்பெயர்ந்து இரந்துனை
வேண்டுவோர்க்குன்
அருளோங்கும் பார்வை நல்கி அமைதியைத்
தாருமையா

- கவிமணி அன்னைதாஸன்

நாடொறும் நாடி முறை
செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.
-குறள்

# வலம்புரி

## ஊரடங்கு உண்டா?

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதை அடுத்து நிரந்தர யுத்தநிறுத்தம் அமுல் படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை அவசர காலச் சட்டமும் தற்போது நாட்டில் அமுலில் இல்லை. இந்நிலையில் யாழ். குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கிறதா அல்லது அது நீக்கப்பட்டுவிட்டதா என்ற தெளிவின்மை மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

நோர்வே தயாரித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் யுத்த நிறுத்தத்தை மீறுவதாயின் 48 மணித்தியாலங்களுக்கு முன்னதாக யுத்த நிறுத்தத்தை மீறும் தரப்பு அது பற்றித் தெரியப்படுத்த வேண்டும்.

எனவே யுத்த நிறுத்த மீறல் என்பது 48 மணித்தியாலத்திற்கு முன்னதாக இடம் பெறுவதற்கான சாத்தியங்கள் மிக மிகக் குறைவானதே.

இவ்வாறு புரிந்துணர்வு ஒப்பந்தம் இருதரப்பையும் இறுக்கமாகக் கட்டுப்படுத்தியிருக்கும் போது, யாழ் குடாநாட்டில் ஏற்கனவே அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது பற்றி படைத்தரப்பு எதுவித அறிவித்தலையும் வெளியிடவில்லை. இதனால் குடாநாட்டு மக்கள் இரவு 10 மணி முதல் அதிகாலை 5 மணி வரை அச்சமின்றி நடமாடமுடியாதுள்ளது. அத்துடன் ஊரடங்கு நேரத்தில் திடீரென நோய்வாய்ப்படுவோர், கர்ப்பிணித் தாய்மார் போன்றோர் ஊரடங்கு அமுலில் இருப்பதாகக் கருதி வைத்திய சாலைக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்கின்றனர். இதனால் விரும்பத்தகாத விளைவுகளும் நடந்து விடுகிறது.

எனவே ஊரடங்கு விடயத்தில் படைத்தரப்பு ஓர் தெளிவான முடிவை அறிவிக்க வேண்டும். ஊரடங்கு அமுல் படுத்தும் போது அதனை வெளிப்படுத்தும் வேகம் ஊரடங்கை நீக்குவது பற்றிய அறிவித்தலில் இல்லாதிருப்பது பொது மக்களின் அசெளகரியங்களை படையினர் பொருட்படுத்தவில்லை என்பதையே தெளிவுபடுத்துகிறது.

எனவே யாழ் குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதா? இல்லையா? என்பதைப் படைஅதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டும்.

# அதிக கொழுப்புச்சத்தும் மனக்கவலையுமே
# இரத்த அழுத்த, இதயநோய்களுக்கு காரணம்

## மருத்துவ விளக்கம்

உலகத்தில் வாழ்ந்துவருகின்ற மனிதர்களில் உயர்ந்தவர் தாழ்ந்தவர், ஏழை, செல்வந்தர், இளையவர், முதியவர், இளைத்தவர், பருத்தவர். ஆண், பெண் என்ற எவ்விதவேறுபாடுகளுமின்றி அவ்வப்போது திடீர் என மாரடைப்பு ஏற்பட்டுப் பலர் மடிந்து வருகிறார்கள். இனி இவ்வித மாரடைப்புகள் ஏற்படாமல் உறுதியாகப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்பதைப் பின் வரும் விளக்கங்களால் தெரிந்து கொள்ளலாம், மாரடைப்பு ஏற்படாமலிருக்க ஆரம்பகாலம் முதலே அறு சுவை உணவில் கசப்புச் சுவையை நீக்காமல் உணவில் கலந்துண்ண வேண்டும், மன உழைச்சல், கவலை கொள்ளுதல், அதிகமான கொழுப்புச்சத்து கலந்த உணவு வகைகளை உண்ணுதல், அளவுக்குமீறிய கடினமான உடலுழைப்பு ஆகியவைகளைக் கூடியவரை தவிர்க்கவேண்டும். போதையூட்டும் பானங்கள், புகையிலை, சிகரெட் இவைகளை உபயோகிக்காமல் இருக்க வேண்டும்.

### மாரடைப்பு எப்படி ஏற்படுகிறது

உடல் முழுவதும் பரவி, பாய்ந்தோடும் இரத்தம் இருதயத்திலிருந்துதான் புறப்பட்டுச் செல்கிறது. மனிதர்கள் உண்ணும்அதிக கொழுப்புச் சத்துக்கள், மிகுந்த மாவுப் பொருட்கள் கலந்த உணவினால் இருதய பகுதியிலிருந்து ஆரம்பமாகும் குழாய்களிலிருந்து ஏனைய உடல் பகுதியிலுள்ள எல்லாஇரத்தக்குழாய்களிலும் கொழுப்புப்பொருள்கள் படிந்துவருகின்றன. இதை ஆங்கிலத்தில்பிளட்கொலஸ்ட்டால் என்று கூறுவார்கள். இம்மாதிரியாகக் கொழுப்புச் சத்துகள் இரத்தக்குழாய்களில் அடைத்துக் கொள்வதால், உடலில் பாய்ந்தோடும் இரத்தம் சீராக எளிதாக ஓடாமல் பிடிப்போடு நிதானமாக ஓடுகின்றது. என்றாவது ஒருநாள் இருதயப் பகுதியிலிருந்து புறப்படும் இரத்தம் முறையாகச் செல்லமுடியாமல் இரத்த அழுத்தம் அதிகமாகின்றது. இரத்த அழுத்தம் அதிகமாகி இருதயத்தில் இரத்தம் பாயமுடியாத காரணத்தினால் இரத்தக்குழாய் வெடித்து விடுகின்றது. இதையே மாரடைப்பு என்று கூறுகின்றோம்.

### நெஞ்சுவலி

மாரடைப்பால் அவ்வப்போது இடையிடையே நெஞ்சுவலி ஏற்படும். மாரடைப்பு ஒருவருக்கு ஏற்படும் முன்னர் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பிருந்தோ அவ்வப்போதோ விட்டுவிட்டு நெஞ்சுவலி இருக்கும். சிலருக்கு இடுப்பு வலி, கை, கால் வலி போன்றவைகளும் இருக்கக் கூடும். இம் மாதிரியான வலி உண்டாகும் நேரங்களில் கீழ்க் கண்ட எளிய சிகிச்சையைச் செய்து பயனடையலாம். நெஞ்சுவலிக்காரர்கள் வெங்காயத்தைஉணவில்அதிகமாகச் சேர்த்துண்ண வேண்டும். நெஞ்சுவலி, குணமாகும் வரை உடலுறவு வைத்துக் கொள்ளக் கூடாது. வலியுள்ள இருதயம், இடுப்பு, கை, கால் போன்ற பாகங்களில் சுத்தமான விளக்கெண்ணெய் என்கின்ற ஆமணக்கு எண்ணெய்யை சிறிது தொட்டுப் பூசி, தீ மூட்டி, உடல் தாங்கக் கூடிய அளவுக்கு இதமாக அனல் காட்டி, சுமார் பதினைந்து நிமிட நேரம் நன்றாக அழுத்தித் தேய்த்து விட வேண்டும். இம் மாதிரித் தேய்த்துப் பின்னர் ஒரு மணி நேரம் கழித்து, சீயாக்காய்த் தூள் போட்டுத் தேய்த்து வெந்நீரில் குளித்து விட வேண்டும். இம் மாதிரி தொடர்ந்து மூன்று தினங்கள் உபயோகிப்பதால் அதிக பலன் கிட்டும். அத்துடன்இத் தினங்களில் காலை உணவுக்கு (சிற்றுண்டி) முன்துளசி இலை ஒன்பதும், உதிரி வேப்பிலை ஐந்தும் நன்றாக மென்று விழுங்கி வர வேண்டும், மற்றப்படி உணவில் எவ்விதச் சுவைக்கட்டுப்பாடும் இல்லை. ஆனால் இரவு உணவு அரை வயிறு தான் உண்ண வேண்டும். நீண்ட கால வலியுடையவர்கள், மாதம் இரு முறை இச் சிகிச்சையைக் கடைப் பிடிக்கலாம்.

### வலி எவ்வாறு உண்டாகிறது.

உடம்பில் இரத்தக் குழாய்களில் அதாவது நெஞ்சுப் பகுதியில் இரத்தம் சிரமமாகப் பிடிப்புடன் செல்வதால் நெஞ்சுப் பகுதியில் வலி ஏற்படுகிறதல்லவா? அதேபோல் மூட்டுக்களின் உராய்வின் போது சரியான பசியின்மையால் பிடிப்பின் காரணமாக வலி ஏற்படுகிறது. மேலும் கை கால் பகுதிகளில் இரத்தம் சரியாகப் பாய்ந்து செல்லாத போதும் பிடிப்பின் காரணமாக வலி உண்டாகிறது.

நம்மில் சிலருக்கு உணவு வகைகளில் உள்ளகொழுப்புச் சத்து அதிகமாகி கொழுப்புப் பொருள் இரத்தக் குழாய்களில் படிந்து அடைப்பதாலும் இரத்தக் குழாய்கள், சுருங்குவதன் காரணத்தாலும் இரத்தம் சுலபமாகஇரத்தக் குழாய்களில் பாய்ந்து செல்லமுடியாமல் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது. இரத்த அழுத்தத்தின் காரணமாக இருதயத்தில் படபடப்பு ஏற்படுகின்றது. சிலருக்குத்தலைச்சுற்றல், மயக்கம் ஏற்படுவதுண்டு. மூளையிலுள்ள இரத்தக் குழாய்கள் மிக இலேசாக இருப்பதால் சிலருக்கு அந்தப்பகுதியில் வெடித்து விடுவதுண்டு. இதற்குக் கீழ்க்கண்ட முறையில் மாத்திரை தயார் செய்து சாப்பிட்டுக் கூறிய உணவு முறையையும் கடைப்பிடித்துப் பலன் பெறலாம்.

### தேவையான மூலிகையும் உபயோக முறையும்

வேப்பிலை, முருங்கைக் கீரை ஆகிய மூலிகைகளைச் சம அளவில் எடுத்து மாத்திரை செய்கை முறைப்படி செய்து தினமும் காலை, பகல் மாலை மூன்று வேளையும் உணவு முடிந்த பின்னர் வேளை ஒன்றுக்கு ஐந்து மாத்திரை வீதம் வாயில் போட்டுத் தண்ணீர் அருந்தி விழுங்கி வரவேண்டும் உணவு முறையில் அவரவர் உடம்பிற்கு ஏற்றஉணவு வகைகளை குறைந்தளவு உப்புச் சேர்த்து அரை வயிறாக உண்ணலாம். இரவு உணவை மாலை ஆறு மணிக்குள்உட்கொள்ளவேண்டும். இரவு படுக்கப்போகுமுன் பூண்டுப்பால் 300 மி.லீ. சாப்பிட்டு வர வேண்டும்.

### பூண்டுப்பால் தயாரிக்கும்முறை

சிறிய பூண்டு ஒன்றை எடுத்து உதிரியாக்கி சுமார் ஆறு அல்லது ஏழுதுண்டுகள் சமவிகிதம் தண்ணீர் கலந்த பசும்பாலில்போட்டு கொதிக்க வைக்க வேண்டும். பூண்டு நன்கு வெந்த பின்பு அந்தப் பூண்டை முதலில் நன்கு மென்று விழுங்கி பாலைப்பின் பருகி வரவேண்டும். இதன் மூலம் உறுதியான பலனை அடையலாம். குறைந்தஇரத்த அழுத்தம்உள்ளவர்கள்வேலைகளைச் செய்யச் சக்தியற்றவர்களாகவும், அடிக்கடி மயக்கம், களைப்பு ஆகியவைகளாலும் அவதிப்படுகிறார்கள். அவர்கள் தங்களது உணவின் போது சமையல்உப்பைமோர் அல்லது தயிர் சாதத்துடன் சிறிது அதிகமாகச்சேர்த்துண்ணலாம். இத்துடன் சமையலில் முருங்கைக் கீரையைச் சேர்த்துண்டு பயன் பெறலாம். மேலும் பேரீச்சம் பழம் வேளைக்கு ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு பழம் வீதம் காலை, பகல் இரவு ஆகிய மூன்றுவேளையும்உணவுக்குப் பின் சாப்பிட்டு வந்தால் நல்ல பலனை அடையலாம். □

நன்றி :
மருத்துவக் குறிப்புகள்
அறத்தமிழ்ஞானம்

## தினசரி தியானம்

### ஜபம்

நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்
- திருமங்கையாழ்வார்

சிவசிவ என்னச் சிவகதிதானே.
- திருமந்திரம்

இறையே, உன்னிலும் பெரியது உன் நாமம். அதை உச்சரித்தவர்களெல்லாம் உன்னை அடையப் பெற்றிருக்கின்றனர். நானும் அதை உச்சரிப்பேனாக.

நாம் காணாத ஒரு மனிதர் வெளிநாட்டில் இருக்கிறார் என்றாலும், அவர்பெயரும் விலாசமும் தெரிந்தால் கடிதம் எழுதி அவரோடு தொடர்பு வைக்கலாம் கடவுளை நாம் காணாதவர் என்றாலும் அவரது நாமத்தை உச்சரித்து நாம் அவரோடு இணக்கம் பண்ணிக் கொள்ளலாம். திரும்பத் திரும்பஅவரது பெயரை மனதுக்குள்ளேயே சொல்லுவது ஜபம்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## இரத்தம் . . .

பட்டு அமெரிக்காவின் சூழ்ச்சி வலைக்குள் அகப்படாது பேச்சுவார்த்தையைமுன்னெடுத்து நியாயமான அரசியல் தீர்வு மூலம் சமாதானத்தை நிலைநிறுத்த முன்வரல் வேண்டும் என்பதை எமது கட்சி வலியுறுத்துகின்றது.

அதேவேளை அமெரிக்கத் தூதுவர் வெளியிட்டுவரும் ஆதிக்கத்தொனியுடன் கூடிய ஆணையிடும் வகையிலான அறிக்கைகளையும் கருத்துக்களையும் எமது புதிய ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (35)

தவக்காலம் - ஐந்தாம் வாரம் (ஊதா)
திபா 89:2-5, 27,29. ‘தாவீதின்
வழிமரபு என்றென்றும் நிலைத்திருக்கும்’

ஆன்ம பலன் பெற்று ஆண்டவனின் உறவில் வளர உதவும் காலம் தவக்காலம். தவத்தை வலியுறுத்தும் இக்காலத்திலே தன் வாழ்நாள் முழுதும்இறைவிருப்பத்திற்காகத் தவத்தில் ஓங்கி நின்ற வளனாருக்கு விழா கொண்டாடுவது ஒருவகையில் மிகப்பொருத்தமே.

மரியாளின் கணவராகிய வளனார், எளியவர், இறைவனின் குரலை எதிர்ப்பின்றி ஏற்றவர். திருக்குடும்பத்தின் உற்ற தலைவர். மீட்பரின் நல்ல தந்தை. தன் பெயருக்கு இழுக்கு வருமென்று எண்ணாது, மரியாளின் நற்பெயருக்கு எவ்விதக் களங்கமும் நிகழாது காத்தவர். இறைவனின் திட்டம் நிகழத் தன்னைத் தயவாய் ஒப்புக் கொடுத்த செயல்வீரர் அவரைப்போல் கடவுளின் திருவுளம் கண்டுணரவும், அதனைச் செயல்படுத்தவும், பிறரின் நலத்திற்காக நம்மையே அர்ப்பணிக்கவும் கற்றுக் கொள்வோம்.

- காவலன்

போஷாக்கிற்கு
ஜீவாகாரம்
வளரும்
பிள்ளைகளுக்கு
பாலூட்டும்
தாய்மார்களுக்கும்
ஏற்ற சத்துணவு
உணவிற்கு தயார் நிலையில்
உள்ள ஒரு முழு உணவு

ஆலோசகர்....

இதேவேளை வன்னிக்கு வருகை தரவுள்ள அன்ரன் பாலசிங்கம் உடல் நிலை ஆரோக்கியமாக இருப்பின் சில மாதங்கள் தங்கியி ருந்து மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கும் விஜயம் செய்யவிருப்பதாகவும், தெரியவருகிறது.

இது இவ்வாறு இருக்க, அன்ரன் பாலசிங்கம் இவ்வாரமோ, அடுத்த வாரமோ இலங்கைக்கு வரக்கூடிய வாய்ப்புகள் குறைவாக இருப்பதாகவும் அப்படி அவர் வருகை தர இருந்தாலும் அரசின் அனுமதியைப் பெற்றே வர வேண்டும் எனவும் பேராசிரியர் ஜீஎல். பீரிஸ் தெரிவித்துள்ளார். சமாதானப் பேச்சுக்களுக்கான முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதன் அவசியத்தைப் பொறுத்தே பாலசிங்கம் கொழும்பு வருவார் என்றும்,தெரிவித்துள்ளார். (வ)

யாழ்ப்பாணத்திலும்..

நடவடிக்கை எடுத்துள்ளதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டின் பல பாகங்களிலும் நடைபெறும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை யாழ் பல்கலைக்கழக சமூகம் ஆரம்பித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# யாழ். மாநகர சபை ஊழியர்கள் பிக்கற்றிங்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை அமைய ஊழியர் தமது வேலை நாட்கள் குறைக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று மாநகர சபைக்கு வெளியே கூடிநின்று தமது எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் பிக்கற்றிங்கில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின் வேலைக்குறைப்பு அடிப்படையில் மாதத்தில் 10நாட்களே வேலை செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டதை அடுத்தே இப் 'பிக்கற்றிங் இடம் பெற்றுள்ளது.

அமைய ஊழியர்கள் தமது வேலைநாள் குறைக்கப்பட்டதால் வாழ்க்கைநிலை பாதிக்கப்பட்டுள்ளதாக மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கத்திடம் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை பிக்கற்றிங்கில் ஈடுபட்டவர்களை மாநகரசபை உறுப்பினர் மற்றும் அதிகாரிகள் சந்தித்து பேச்சு நடத்தினர். இதன் போது ஊழியர்களின் வேலை நாட்களை 15 என ஆக்குவதென முடிவுசெய்யப்பட்டதை அடுத்து பிக்கற்றிங் கைவிடப்பட்டது. (இ-19-225)

மில்க்வைற்
உற்பத்திகளை அன்னா
கோப்பிக்கடை, நவீனசந்தை
யாழ்ப்பாணத்தில்
பெற்றுக்கொள்ளலாம்
மில்க்வைற் சோப்
இன்டஸ்ரியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541


# நீதிமன்றில் அனுருத்த ஆஜராகவில்லை

கண்டி மடவளைப் படுகொலை சம்பந்தமாக நேற்று தெல்தெனிய நீதிமன்றத்தில் இடம்பெற்ற விசாரணையின் போது கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை சுகவீனம் காரணமாக ஆஜராகவில்லை .

அவர் சுகவீனமுற்றிருப்பதற்கான மருத்தவ அத்தாட்ச்சிப்பத்திரம் அவரது சட்டத்தரணியால் சமர்ப்பிக்கப்பட்ட போது நீதவான் இனேகா ரணசிங்கா அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதேவேளை இக்கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள ஜெனரல் ரத்வத்தையின் புதல்வர்கள் இருவருக்கும் சிறைச்சாலையில் ஆகக் கூடியவசதிகள் அளிக்கப்படுவது தொடர்பாக சட்டத்தரணிகளால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டபோது, சிறைச்சாலை ஆணையாளரை அடுத்த விசாரணைக்கு வருமாறும், இது தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை அடுத்த மாதம் முதலாம் திகதி வரை சந்தேக நபர்கள் அனைவரையும் விளக்க மறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (வ)



அண்மையில் உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட கல்லூரியின் பழைய மாணவனும் உடுவில் கமநல சேவை நிலையத் தலைவருமான திரு.செ.இலகுநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு.கதிரவேலு, கோப்பாய்க் கோட்டக்கல்வி அதிகாரி திரு.எஸ்.சிவஞான சுந்தரம், கல்லூரி அதிபர் திரு.அ.ஈஸ்வரநாதன், பாடசாலை அபிவிருத்திச் சங்கச்செயலாளர் திரு.ஏகாம்பரநாதன் , ஆகியோரும் காணப்படுகின்றனர்.

மட்டக்களப்பில்...

அறிவிப்பை வெளியிட்டதை அடுத்து பொலநறுவையுடன் நிறுத்தப்பட்டிருந்த புகையிரத சேவை அதன் எல்லையான வெலிக்கந்த வரை நீடிக்கப்பட்டிருந்தது.


தற்பொழுது அரசும் புலிகளும் நிரந்தர போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத் திட்டதையடுத்து புகையிரத சேவை மட்டக்களப்புவரை நீடிக்கப்பட்டுள்ளது. (இ)

அரசியல்யாப்பு..

அரசியல் யாப்பு சீர்திருத்தம் கொண்டு வரப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சட்டவாக்கத்திணைக்களத்தினால் மீளாய்வு செய்யப்பட்ட இத்திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. அரசியல் யாப்புப்பிரேரணைக்கு ஜனாதிபதி பிரேரிக்கும் அங்கத்தவரை இதுவரை ஜனாதிபதி அறிவிக்காமையால் பேரவை அமைக்கப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

பேரவைக்கான அரச மற்றும் எதிர்க்கட்சி அங்கத்திவர்களின் பெயர்கள் 24நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)



அண்மையில் யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்ற நாடக அரங்கக் கண்காட்சியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ்.இணைப்பாளர் ஈமார் கிராங்கிள் கண்காட்சி மண்டபத்தை நாடாவை வெட்டி திறப்பதைக் காணலாம்

சமையல் ஆள் தேவை

யாழ்.மாநகராட்சி மன்ற சிற்றுண்டிச் சாலைக்கு சகல உணவு வகைகளும் தயாரிக்கக் கூடிய சமையல் ஆள் தேவை உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்
யாழ். மாநகர ஊழியர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.
(4851)

# இளைஞனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

இசை நிகழ்ச்சிக்குச் சென்ற இளைஞனைக் காணவில்லை என யாழ் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சில்லாலை பண்டத்தரிப்பைச் சேர்ந்த தொழில் நுட்பக்கல்லூரி மாணவன் தேவதாஸன் ரொனால் டோசிரேன் (வயது17) என்பவரே காணமல் போனவர் ஆவார்.

கடந்த 12ந் திகதி இசை நிகழ்ச்சி பார்க்கச் செல்வதாக கூறிச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என பிரஸ்தாப இளைஞனின் தந்தையார் முறைப்பாடு செய்துள்ளார். (இ-19)

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
வரவேற்கின்றோம்
பாராட்டுகின்றோம்
வாழ்த்துகின்றோம்

யாழ்பல்கலைக்கழகம் பூரண தகுதியுடைய
குகஸ்ரீ வித்துவான் க.சொக்கலிங்கம்[சொக்கன்]
அவர்களுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிய
செயலை வரவேற்கின்றோம்.
பல்கலைக்கழகத்தைப் பாராட்டுகின்றோம்.
சொக்கனை வாழ்த்துகின்றோம்.

கரவெட்டி.
கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்
கட்டைவேலி - நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்
(C/3728)

கண்ணீர் அஞ்சலி

வடபிராந்திய இந்துப் பேரவை தலைவரும்,
வேலணை சைவசேவா சங்க உபதலைவரும்,
வேலணை முடிப்பிள்ளையார் ஆலய பரம்பரை
சந்ததியின் ஸ்தாபகருமாகிய கலாபூஷணம்
அமரர் பேரம்பலம் சந்திரசேகரம் [எம்.ஏ]
அவர்களுக்கு எமது ஆழ்ந்த
கண்ணீர் அஞ்சலி

வேலணை பாலா
பா.பாலசுப்பிரமணியம்
முடிப்பிள்ளையார் கோவிலடி
(C/3729)

மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ.சங்கம்

எமது சங்கத்தில் தற்காலிக தட்டெழுத்தாளருக்கான பின்வரும் தகமைகளுடன் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. தட்டெழுத்தாளர் [தற்காலிகம்] குறி.இல:-30S:16
2. வயது : 18 . 45 வருடம்
3. தகமைகள்:

க.பொ.த(சாதாரணத்தில்) சம்பந்தப்பட்ட மொழியினை உள்ளடக்கியதாய் ஆறு பாடங்களில் சித்தியும், சிங்களம் / தமிழ் தட்டெழுத்தாற்றல் நிமிடத்திற்கு 15 சொற்களும்,ஆங்கிலமாயின் தட்டெழுத்தாற்றல் நிமிடத்திற்கு 20 சொற்களும்

மேலதிக தகமைகள்

தமிழ்,ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கணணி மூலமாக தட்டச்சு செய்யக் கூடிய ஆற்றலும் அதற்குரிய சான்றிதழும் பெற்றிருத்தல் வேண்டும்.

சங்க எல்லைப்பரப்பில் வசிப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ரூபா 5 /- சங்கத்தில் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பெற்று தலைவர் மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம் என்ற முகவரிக்கு 26. 03. 2002 நண் 11கலுக்கு முன் கிடைக்கக் கூடிய தாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

தலைவர்
மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ.சங்கம்
18.03.2002
(C/3727)

அன்பு வாசகர்களே!
வலம்புரியின் வாரமலர்
சங்கு நாதம்
வலம்புரி + சங்குநாதம் 14 ரூபா மட்டுமே
ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் உங்கள்
கைகளில் தவழும்
அன்றைய தினம் வலம்புரியும் தனது தினசரிச்
செய்திகளுடன் வெளிவரும்
வலம்புரியும் சங்குநாதமும் இணைந்த விலை ரூபா - 14
மு.குறிப்பு: உங்கள் முகவரிடம் வலம்புரியுடன் சங்குநாதத்தையும்
மறக்காமல் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்த்ரபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.